# ஐக்கியதீபம்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

யாழ்ப்பாணம்
1969
மார்கழி

மலர் 25
இதழ் 4



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

POSTAGE CEYLON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

| | | ரூபா-சதம் |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் ... ... | -03 |
| 2. | கடன் முறி ... ... | -03 |
| 3. | மத்தியஸ்தர் மனு ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் ... ... | -03 |
| 5. | அங்கத்தவர் பாஸ்புத்தகம் (நாணய சங்கம்) | -25 |
| 6. | ப. நோ. கூ. ச. ,, ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு ... | 7-25 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) .... ... | 6-00 |
| 10. | கடன் இடாப்பு ... .. | 3-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு ... | 1-50 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) .... ... | 7-00 |
| 14. | சிட்டைப்புத்தகம் பண்டசாலை 20/1 ... | 3-25 |
| 15. | ,, 18/1 ... | 7-00 |
| 16. | மனேஜர் பிணைப்பத்திரம் ... ... | -20 |
| 17. | பொருள் பேரேடு (பண்டசாலை) ... | 6-00 |
| 18. | அங்கத்தவர் மனுப்பத்திரம் ... ... | -03 |
| 19. | பங்கு இடாப்பு ... ... | 3-50 |
| 20. | பங்குப் பணச் சிட்டை ... .. | 1-00 |
| 21. | விலைபொருள் இடாப்பு ... | 3-50 |
| 22. | உப-விதிகள் ப. நோ. கூ. சங்கம் ... | -40 |
| 23. | விவசாயக் கடன் மனுப்பத்திரம் ... | -05 |
| 24. | விவசாயக் கடன்முறி ... ... | -06 |
| 25. | விவசாயக் கடன்—இணைப்பு i ... | -03 |
| 26. | விவசாயக் கடன்—இணைப்பு (புத்தகம்) ii ... | 6-75 |
| 27. | விவசாயக் கடன்—இணைப்பு iii ... | 3-00 |
| 28. | விவசாயக் கடன்—இணைப்பு iv ... | 3-30 |
| 29. | நெசவுச் சங்க உபவிதி .. ... | -40 |
| 30. | ப. நோ. கூ. ச. காசுப் புத்தகம் புதியது ... | 6-00 |
| 31. | விற்பனைச் சிட்டை 8/1 .. .. | 3-75 |
| 32 | சமாசங்களின் கணக்குமுறை ... ... | 3-50 |
| 33. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி ... ... | -45 |
| 34. | கடற்றொழிலாளர் கூ.வி. சங்க உபவிதிகள் ... | -75 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Registered as a Newspaper in Ceylon, Regd. No. A 13)

Appropriate Technology Servi
NALLUR, JAFFNA
No. 1688

# இந்த இதழில்

ஆசிரியர் தலையங்கம் ... 3

அரசாங்கம் வழங்கியகாணி உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததல்ல ... 5

நவீன கூட்டுறவு ஆஸ்பத்திரி ... 9

கூட்டுறவுப் பணியாளர் சேவைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் .... 10

இசையினுல் உளைப்பாட இனிக்குதய்யா ... 16
— க. சிவபாலன்

பொருள்களை வாங்கி விற்பதல்ல கூட்டுறவு ... 17

ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவது இன்றியமையாதது .. 19

உளநிறைவாய் வாழ்வதே கூட்டுறவு ... 20
— நல்லைக் குமரன்

தொடர்ந்து தனித்து இயங்குவதா அன்றி மக்கள் வங்கியுடன் இணைவதா? ... 21

தவம் 28
—காரை செ. சுந்தரம்பிள்ளை

**அட்டைப்படம்:**

வ. ஐ. மே. சபையின் வருடாந்த கூட்டுறவு மகாநாட்டில தலைவர் திரு. இ. இராசரத்தினம் அவர்கள் உரையாற்றுகையில் எடுத்த படம்.

Edited & published by T. SEENIVASAGAM, B.A., J.P. residing at Vannarponnai East, Jaffna, for, and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd. K. K. S. Road, Jaffna and printed at the N. P. Co-op. Ptg. & Pub. Socy., Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையற்ற புகையின்பம் தருவது

# J. M. T. ரதி பீடி

காரம், மணம், குணம் யாவும் நிறைந்தது!

# J. M. T. ரதி பீடி

சிறந்த புகையிலைக் கலவைகளைக் கொண்டு
கைதேர்ந்தவர்களின் மேற்பார்வையின் கீழ்
தயாரிக்கப்படுவது

## J.M.T. ரதி பீடி

மக்கள் விரும்புவது

## J.M.T. ரதி பீடி

இன்றே வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்

## J.M.T. ரதி பீடி

உற்பத்தியாளர்கள்:

யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை
ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன்
உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி இல: **543**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B. A., J. P.

மலர் 25 | யாழ்ப்பாணம் 1969 மார்கழி | இதழ் 4

## தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

திரு. ஆரிய அபேசிங்கி 1-12-69 ல் வெளியான ''கூட்டுறவு''ப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில், இலங்கையில் கிட்டத்தட்ட மூவாயிரம் உற்பத்தியில் ஈடுபடும் அங்கீகாரம்பெற்ற தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றனவென்றும், 613,000 குடிசனமும் 992 சதுரமைல் பரப்பும் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆக 62 தொழில்களே அங்கீகாரம் பெற்றவையாயிருக்கின்றன வென்றும் எடுத்துரைக்கின்றனர். இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்களில் கிட்டத்தட்ட மூவாயிரம் தொழிற்சாலைகள் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றன. இத்தொகையைக் கருத்தில் கொள்ளும்பொழுது யாழ்மாவட்டத்தில் தொழிற்படும் அறுபத்திரண்டு தொழிற்சாலைகள் மிகமிக அற்பமாக இருக்கின்றனவன்றோ.

மன்னார், வவுனியா, திருக்கோணமலை மாவட்டங்களின் பரப்புக்களையும் அவற்றின் குடிசனத்தொகையையும் உற்று நோக்கும்பொழுது அவ்விடங்களில் தொழிற்படும் தொழிற்சாலைகள் மிகமிகக் குறைவாகவேயிருக்கின்றன. யாழ்ப்பாணம், வவுனியா, திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலை மாவட்டங்களில் புகைவண்டி, மோட்டார் வாகனம், ஆகாய விமானம் முதலிய போக்குவரத்து வசதிகளும், தொழில்களைச் செய்வதற்குத் தேவையான மக்களும், மூலப்பொருள்களும் இருக்கின்றனவென திரு. ஆரிய அபே சிங்கி அறிவிப்பதுடன் மக்களுக்குப் போதிய கல்வியறிவும், உற்பத்திப்பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்குக் கூட்டுறவுத்தாபனங்களும் இருக்கக்கூடியதாக இப்பகுதிகளில் உற்பத்தித் தாபனங்களைப் போதியளவு தோற்றுவிக்காதது வருந்தத்தக்கதென அறிவிக்கின்றனர்.

அண்மையில் நடந்த வடபகுதி ஐக்கியமேற்பார்வைச் சபையின் மாநாட்டில் எமது சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளர் திரு. K. S. பொன்னுத்துரை திரு. ஆரியஅபே சிங்கி மேலே கூறிய கருத்துக்களை யெடுத்துரைத்ததுடன், இந்நிலை மாறவேண்டுமெனவும் இப்பகுதிகளிலுள்ள மூலப்பொருள்களைக் கொண்டு தொழிற்சாலைகள் நிறுவப்படுதல் வேண்டுமெனவும், கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியிலும் ஈடுபடுதல் அத்தியாவசியமென்றும் அறிவுறுத்தியமை போற்றத்தக்கது.

எமது பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சென்ற மாதம் யாழ் மாவட்டத்திற்கு வருகைதந்தபொழுது வடபகுதிக் கூட்டுறவாளர்களைப் போற்றியதுடன் பொருளாதாரக் குடியாட்சி கூட்டுறவு இயக்கத்தின் மூலமே நனவாக்கப்படவேண்டுமென அறிவுரை கூறியதை நாம் ஞாபகத்தில் வைத்துத் தொண்டாற்றல் வேண்டும். டென்மார்க் போன்ற மூலப்பொருள் வளம் குறைந்த நாடுகள் எவ்விதம் பொருள் உற்பத்தியால் தமது பொருளாதாரத்தைச் சீர்படுத்தியிருக்கின்றன என்பதை அறிந்து நாமும் உற்பத்தி மூலம் நமது பொருளாதாரத்தைச் சீர்படுத்த முயற்சித்தல் வேண்டும். பொருளாதாரம் சீராகவிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களும் விசேடமாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும் தமது நோக்கங்களை விஸ்தரித்து உற்பத்தியில் ஈடுபடுதல் வேண்டும். அரசாங்கம் இதற்கு எல்லா உதவிகளையும் கொடுக்கத் தயாராகவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் வழங்கிய காணி

# உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததல்ல!

## வேறு காணியைத் தருமாறு விஸ்வமடு குடியேற்ற வாலிபர் கோரிக்கை!

உப உணவுப் பயிர்ச் செய்கையை, குறிப்பாக மிளகாய்ப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு எமக்கு அரசு வழங்கிய காணி ஏற்கனவே நெற் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட காணியாகும். இக்காணியில் நீர் தேங்கி நிற்பதால் மிளகாய்க் கன்றுகள் துஞ்சுகின்றன. எனவே, உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு உபயோகமற்ற இக் காணிக்கு பதிலாக வேறு காணியைத் தரவேண்டும்.

இவ்வாறு விஸ்வமடு குடியேற்றத் திட்டத்திலுள்ள படித்த வாலிபர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்கள்.

1966-ம் ஆண்டு விஸ்வமடு குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட இவ்வாலிபர்களில் பெரும்பாலோர் எஸ். எஸ். சி. படித்தவர்கள். இவர்களுக்குச் சராசரி வயது இருபத்தைந்து. இப்பொழுது மொத்தமாக 159 வாலிபர்கள் அங்கு குடியேறியிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் திருமணமாகாதவர்.

65 வீதநிலத்தில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் மிளகாய்க் கன்றுகள் மாத்திரமல்ல, வேறு உப உணவுப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள முடியாதிருக்கின்றது. எனவே இக்காணிக்குப் பதிலாக இங்கு அண்மையில் இருக்கும் மேட்டு நிலங்களை எமக்குத் தந்துதவ வேண்டுமென மேற்படி திட்டத்திலே வழங்கப்பட்ட காணியிலே உப உணவுப் பயிர் செய்கையினை மேற்கொள்வதில் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்து வரும் கஷ்டங்களையும், வசதியீனங்களையும் வாலிபர்கள் அரசாங்கத்திற்கு மேலும் விளக்கியுள்ளார்கள்.

தாம் இப்போது இப்பயிர்ச் செய்கையில் அடைந்து வரும் நட்டத்தை தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் அல்லது தாம் மேலும் நட்டமடைய நேரிடும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

வடிகால்களைக் கட்டுவதன் மூலம் காணிகளில் நீர் தேங்கி நிற்றலைத் தடுத்து அக்காணிகளைத் திருத்தலாம் என அதிகாரிகள் கூறியுள்ளார்கள் என்று கூறும் இவ் வாலிபர்கள் வடிகால்களைக் கட்டினாலும் அக்காணிகளை உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு உகந்த காணியாக மாற்ற முடியாது என்பதைத் தமது அனுபவ மூலமாகக் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

வடிகால்களை அமைப்பதற்குப் பணத்தைச் செலவழிப்பது வீண் என்றும் தாம் குறிப்பிட்ட மேட்டு நிலங்களைத் தமக்குக் கொடுத்தால், தாம் இப்பொழுது பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வரும் நிலத்தைக் திருப்பிக் கொடுக்க ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

நெற்செய்கைக்குக் கொடுப்பதுபோல் மானிய உரம் தமக்குக் கொடுக்கப்படவேண்டும் என இவர்கள் மேலும் கோரியுள்ளார்கள்.

மேலும், மிளகாய்க் கன்றுகளுக்கு ஏற்படும் இலை சுருள் வியாதி, தண்ணீர் தேங்கி நிற்பதால் அவைகள் துஞ்சுதல் முதலியவற்றால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய தமக்கு ஒரு காப்புறுதித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், மிளகாயின் உத்தரவாத விலையைக் கூட்டவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளார்கள்.

போதிய வைத்திய வசதிகள் இல்லாதபடியால் நாம் அவஸ்தைப் படுகிறோம். ஆகையால், வாரத்திற்கொரு தடவை ஓர் அப்போதிக்கரி எமது இடத்திற்கு வந்து செல்ல வசதியளிக்க வேண்டும். அத்துடன் இக்குடியேற்றத்திட்டத்திற்கு இடப்பட்ட பாதைகளைச் செம்மையாக அமைத்து உதவவேண்டும் என கோரியுள்ள மேற்படி குடியேற்ற வாலிபர்கள் தமது இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் குடியேற்றத்திட்டம் பயன் மிக்கதாக விளங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கூட்டுறவு மருத்துவ மனைகளைப் போன்றவை தேவை

இந்திய குடிப்பதி வி. வி. கிரி உரை

"இலங்கைத் தீவைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மருத்துவ மனைகள் செயற்படுவதுபோல் நமது நாட்டில் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும், நகரங்களிலும் கூட்டுறவு மருத்துவ மனைகளை அமைக்கலாம்" என்று இந்திய குடிப்பதி மேன்மைமிகு வி. வி. கிரி அவர்கள் மதுரையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் இத்தகைய மருத்துவ மனைகள் தோன்றவேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் நாடு கூட்டுறவு யூனியனின் வெளியீடான "கூட்டுறவு" சஞ்சிகை மார்கழி இதழில் "கூட்டுறவு மருத்துவமனை" என்னும் ஆசிரியத் தலையங்கத்தைத் தீட்டியுள்ளது. யாழ்ப்பாணக் கூட்டுறவு மருத்துவ மனைகளை குடிப்பதி உதாரணமாகச் சுட்டிக் காட்டியதையும் மேற்படி சஞ்சிகை அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஐந்து சுகாதாரக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு மருத்துவ வசதியை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளன என்று மேலும் தெரிவித்துள்ள அச்சஞ்சிகை, "யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு ஆஸ்பத்திரிகளைப் போல சொந்தக்கட்டிடங்களையோ, நவீன கருவிகள் முதலியவைகளையோ இச்சங்கங்கள் பெற்றிருக்கவில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளது.

# தமிழ்நாடு நியமித்த சந்தானம் கூட்டுறவு விசாரணைக் குழு

தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் நிலையை ஆராயும் பொருட்டு திரு. க. சந்தானம் தலைமையில் நியமிக்கப்பட்ட கூட்டுறவு விசாரணைக்குழுவினர் தமது அறிக்கையை அரசுக்கு வழங்கியுள்ளனர் அவ்வறிக்கையில் அவர்கள் செய்துள்ள தகவுரைகள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைப் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு சி. பா. ஆதித்தனூர் தமிழ்நாடு கூட்டுறவு யூனியனில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் கூறியதாவது.

"கூட்டுறவுத் துறையின் சீரமைப்பு சம்பந்தமாக திரு. க. சந்தானம் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சுகளை அமுல் நடத்த தமிழக அரசு முடிவு செய்துவிட்டது. ஆனால் (1) சட்டத்திற்குப் புறம்பாக உள்ள சில சிபார்சுகள், எல்லாவகையான கூட்டுறவுச் சங்கங்களையும் ஒருங்கிணைந்த முறையிலே ஒரே அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் ஒரே கூட்டுறவுப் பதிவாளரின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் உள்ள சிபார்சுகள் (3) பல்வேறு மாநாடுகளில் எல்லா மாநில கூட்டுறவு அமைச்சர்களும் அதிகாரிகளும் எடுத்துக் கொண்ட முடிவுக்குப் புறப்பான சிபார்சுகள் (4) ரிசர்வ்வங்கி விடுத்துள்ள பல நல்ல யோசனைகளுக்குப் புறம்பான சிபார்சுகள்; ஆக இந்த நான்கு வகைச் சிபார்சுகள் நீங்கலாக ஏனைய சிபார்சுகள்யாவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுல் நடாத்தப் படும்.

—கூட்டுறவு—தமிழ்நாடு

# உணவுற்பத்தி செய்ய வேண்டாம்

## அரசாங்கம் உத்தரவு

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று எமது நாட்டில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மாறாக உணவு உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்று எந்த இடத்திலாவது முயற்சிகள் எடுத்துக் கொண்டால் அது ஆச்சரியந் தானே! பின்லாந்து நாட்டில் இந்த அதிசயம் நிகழ்வதாக 'தினமணி' இதழ் குறிப்பிடுகிறது. அந்நாட்டில் உணவு உற்பத்தி நிறைந்து வழிகிறதாம். அதனால் சுமார் $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலங்களில் கமக்காரர் அடுத்த இரு ஆண்டுகளுக்கு எதையும் பயிரிடக்கூடாது என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. கமத்திலிருந்து அடையும் வருமானத்திற்குச் சமமான தொகையை பின்லாந்து அரசு கமக்காரர்களுக்குக் கொடுக்க முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கூட்டுறவு ஆஸ்பத்திரி

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள "சுஷ்ருஷா" என்னும் சமூக சேவா நிலையம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? சுய உதவி, பரஸ்பர உதவி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் பொது நலச் சேவையை வளர்ந்தோங்கச் செய்து மக்கள் நலனுக்குப் பணி புரிவதே இந்த ஸ்தாபனத்தின் நோக்கமாகும். இந்திய-பாகிஸ்தானம் எல்லைச் சண்டையின்போது, ஜம்மு, காஷ்மீரம் எல்லைப் பகுதிக்கும், வேறு முன்னணிப் பகுதிகளுக்கும் காயமடைந்த ராணுவத்தினருக்கு உதவ பல மருத்துவ நிபுணர்களை "சுஷ்ருஷா" அனுப்பியது. அண்மையில் பம்பாயில் 'மக்கள் கூட்டுறவு மருத்துவமனை' என்ற பெயரில் நான்கு மாடி கொண்ட நவீன ஆஸ்பத்திரியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே முதலாவதாக ஏற்பட்டுள்ள நவீன ஆஸ்பத்திரியாகும் இது.

கூட்டுறவு ஆஸ்பத்திரி அமைக்கும் செலவு ரூ. 28 லட்சம். கூட்டுறவு ஆஸ்பத்திரித் திட்டத்தில் 200 மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட 3100 பங்குதாரர்கள் சேர்ந்துள்ளார்கள். இவர்களிடமிருந்து ரூ. 6 லட்சம் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிர அரசு ரூ. 5 லட்சம் பெறுமான 15,000 பங்குகளை எடுத்துள்ளது. மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு வங்கி ரூ. 14 லட்சம் கடன் உதவியை வழங்கியுள்ளது.

கூட்டுறவு ஆஸ்பத்திரியில் இப்போது 120 படுக்கைகள் நிறுவப்பட்டுள்ளன. மாடிக் கட்டிட அமைப்பு 'எக்ஸ்-ரே' எடுக்கும் பகுதி, வியாதியஸ்தர்களைப் பரிசோதனை செய்யும் பகுதி ஆகியவை தனியாய் ஏற்பட்டுள்ளன. 21 மருத்துவ நிபுணர்கள் இவைகளில் பணி புரிகிறார்கள். துணிகளைச் சலவை செய்யும் நவீன சலவை நிலையம் ஒன்றும் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் உள்ளது. பம்பாயிலுள்ள மற்ற ஆஸ்பத்திரிகளுக்கும், இந்த சலவைச் சாலை பணியாற்றிவருகிறது.

தனியார் மருத்துவ நிலையங்களிலோ அல்லது மற்ற ஆஸ்பத்திரிகளிலோ ஒரு நோயாளிக்கு படுக்கை ஒன்றுக்கு ரூ. 13 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் ரூ. 8 தான் அங்கத்தினர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது; மேலும் மருந்து பில்கள் மீது 10 சதமானம் தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

—கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முற்றொடர்)

# கூட்டுறவுப் பணியாளர் சேவைக் குழு நியமிக்கப்படல் வேண்டும்

## கூட்டுறவு ஆணைக்குழுவின் தகவுரை

**8. முகாமை**

(i) கூட்டுறவு வளர்ச்சியிலே முகாமை தனி வேறுபட்ட உயிர்நிலையான ஆக்கக் கூட்டுறவுத் தலைவர்களும் குறிப்பாக நிருவாகக் குழு உறுப்பினரும், திணைக்கள உத்தியோகத்தரும் தெளிவாகக் கருதத் தலைப்படவேண்டும்.

(ii) முகாமையாளர் பயிற்சி செயல்முறை சார்ந்த சேவைக்காலப் பயிற்சியாய் இருத்தல் வேண்டும். ஒரு நீண்ட பயிற்சியைத் தொடக்கத்திலே நடாத்துவதற்குப் பதிலாக குறுகியகால நிலைவுறுத்தற் பயிற்சிகள் ஒழுங்காக நடாத்தப்படல் வேண்டும்.

(iii) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பிரதம செயலாட்சி உத்தியோகத்தராய் தலைவர் அல்லது முகாமையாளரே சுட்டப்பட வேண்டும்.

(iv) உயர்தர வியாபார நிருவாகத்தில் சிறப்புப் பயிற்சிகளை நடாத்துவதற்கு கூட்டுறவு ஒன்றியமும், தேசீயக் கூட்டுறவு அபிவிருத்திச் சபையும் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

**9. பணியாளர்**

(i) கூட்டுறவுப் பணியாளரின் சம்பள விகிதங்களை அங்கீகரிப்பதற்கும், கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றுவது தொடர்பாக வேறு சில கடமைகளை நிறைவேற்றுவதற்கும் மூவர் அடங்கிய விசேட தற்காலிகக் குழு ஒன்று உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும்.

(ii) கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றுபவர்களின் சேவை நிலைமையைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தித்தரமுயர்த்துவதற்கு நிரந்தரமான கூட்டுறவுப் பணியாளர் சேவைக்குழு நியமிக்கப்படல் வேண்டும்; அதேபோன்ற குழு மாவட்ட அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இயங்குதல் வேண்டும்.

(iii) கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்படி கூட்டுறவுப் பணியாளர் தொடர்ந்து மத்தியஸ்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆனால், அநேகசமயம் தொழிற் பிணக்குச் சட்டமளிக்கும் பாதுகாப்பு அவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

## 10. கணக்குகளும் கணக்குப் பரிசோதனையும்

(i) சமீபகாலத்திலே கணக்குப் பரிசோதனை புறக்கணிக்கப்பட்டமை கூட்டுறவு அமைப்பு முழுவதையும் கீழறுத்துவிட்டது. கணக்குப் பரிசோதனையைச் செவ்வனே செய்வதைப் பொறுத்துத்தான் இனிமேல் கூட்டுறவுத் திணைக்களத்தினை முதற்கண் மதிப்பிடுதல் வேண்டும்.

(ii) கணக்குப் பரிசோதனைக்குப் பொறுப்பாகக் கூட்டுறவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலே ஒரு முழுநேர பதில் ஆணையாளரும் அவருக்கு உதவி புரியும் அலுவலரும் செயற்களத்திலே உதவி ஆக்க ஆணையாளர்களும் இருத்தல் வேண்டும்.

(iii) கணக்குப் பரிசோதனையைத் துரிதப்படுத்துவதற்கும், தவணை தப்பிய கணக்குப் பரிசோதனைகளின் தொகையைக் குறைப்பதற்கும், பெரிய சங்கங்களின் கணக்குகளை அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பரிசீலிப்பதற்குக் கூட்டுறவுத் திணைக்களம் மேலும் அனுமதித்தல் வேண்டும்.

(iv) கணக்குப் பரிசோதனைக்கு உண்மையிலே ஏற்படும் செலவுகளை ஏறத்தாழ அடிப்படையாகக் கொண்ட கணக்குப் பரிசோதனைக் கட்டணத்தை அறவிடும் முறை படிப்படியாகச் செயற்படுத்தப்பட வேண்டும்.

(v) கூட்டுறவுச் சம்மேளனம் ககவுரை செய்த மையப்படுத்தப்பட்ட கணக்கு வைக்கும் முறை கச்சிதமான ஒரு பகுதியிலேயுள்ள ஒரு ப. நோ. கூ. சங்கத்திலே பரீட்சார்த்தமாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) கணக்குப் பரிசோதிக்கும் பொறுப்பைக் கூட்டுறவுச் சம்மேளனத்திடம் ஒப்படைப்பதன் உசிதம் பற்றி 10 வருடங்களிலே அல்லது அதற்குக் குறைவான காலத்திலே மீண்டும் ஆராயப்பட வேண்டும். இதற்கு இடைப்பட்ட காலத்திலே கணக்குப் பரிசோதனை கூட்டுறவுத் திணைக்களத்தின் கடமையாகத் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

## 11. மேற்பார்வை

(i) பொது மேற்பார்வை கூட்டுறவுத் திணைக்களத்தின் பொறுப்பாய் இருத்தல் வேண்டும். கணக்குப் பரிசோதனையிலிருந்தும் ஊக்குவிப்பு, அபிவிருத்தி வேலைகளிலிருந்தும் மேற்பார்வையாளர் தாம் கடமையாற்றும் பகுதியிலே வாழவேண்டும் அவர்களுக்கென நிலைவுறுத்தற் பயிற்சிகள் அடிக்கடி நடாத்தப்படுவதுடன் அவர்களை செயற்களத்திலே அரசியற் தலையீடுகளிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

(ii) ஈற்றிலே கூட்டுறவுத் திணைக்களம் பொது மேற்பார்வையுடன் நின்றுவிட வேண்டும். வியாபார நடவடிக்கைகளின் மேற்பார்வையைக் கூட்டுறவு இயக்கத்தின் உச்ச நிறுவனங்களிடம் (மக்கள் வங்கியும் கூ. மொ. வி. தாபனத்திற்குப் பதிலாக உருவாக இருக்கும் புதிய சம்மேளனம் உட்பட) விட்டுவிட வேண்டும்.

(iii) ஒவ்வொரு உச்ச வியாபார சம்மேளனமும் தனது செயற்றுறையிலே வியாபார நிதி சம்பந்தமான, தொழில் நுட்ப மேற்பார்வைக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். மக்கள் வங்கியின் மேற்பார்வை விசேட பயனளிக்கும்.

(iv) கூட்டுறவுத் திணைக்களம் அல்லாத ஏனைய அரசாங்கத் திணைக்களங்கள் தத்தமது விசேட செயற்றுறைகளோடு தொடர்பான தொழில் நுட்ப விடயங்களை மட்டும்தான் மேற்பார்வை செய்தல் வேண்டும்

## 12. நிதியுதவி

(i) மக்கள் வங்கி கூட்டுறவு இயக்கத்தின் கடனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவி, வங்கி உச்ச நிறுவனமாகக் கொள்ளப் படல் வேண்டும். ஆனால் அதன் கட்டுப்பாட்டிலும், அமைப்பிலும், நிருவாகத்திலும் சில மாற்றங்கள் செய்யப் படல் வேண்டும்.

(ii) தகவுரை செய்யப்பட்ட மாற்றங்கள் மக்கள் வங்கியில் செய்யப்பட்டதும் எஞ்சியிருக்கும் கூட்டுறவு வங்கிகள் தன் விருப்பார்ந்த முறையில் மக்கள் வங்கியுடன் இணைதல் உசிதமானது. அதற்கிடையிலே எல்லாமாக உள்ள ஏழு கூட்டுறவு வங்கிகளையும் மத்திய வங்கி பரிசோதனை செய்தல் வேண்டும். திருப்திகரமற்ற முறையில் இயங்கும் வங்கிகள் உடனடியாக மக்கள் வங்கியுடன் இணையவேண்டும் என விதிக்கப்படல் வேண்டும்.

(iii) பெரிய ப. நோ. கூ. சங்கங்களிலே கிராம வங்கிகளை அமைப்பதைத் தொடர்ந்து சுறுசுறுப்பாக ஊக்குவிக்க வேண்டும். ஆனால், இவ் வங்கிகளின் பங்கினைத் தெளிவுபடுத்துவதற்கும், அவர்களின் இயக்கத்தினை விருத்திசெய்வதற்கும் நிதிவைப்பாளர்களுக்கு மேலும் பாதுகாப்பு அளிப்பதற்கும் சில மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். இவற்றினை "கூட்டுறவுக் கிராமவங்கிகள்" என அழைத்தல் வேண்டும்.

(iv) விவசாயக்கடன் தேவைகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்குப் புதியதிட்டம் தேவைப்படுகின்றது.

(v) வெளிக்கடன் எல்லையைக் கூட்டுறவுத் திணைக்களம் நிர்ணயிப்பது கைவிடப்படல் வேண்டும்.

(vi) சுற்றுமுதல் முறை கூட்டுறவுச் சங்கங்களிலே, குறிப்பாக விற்பனைச் சங்கங்களிலே கையாளப்படல் வேண்டும்.

(vii) கூட்டுறவு நிதி கூட்டுறவுத் திணைக்களத்திடமிருந்து இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்திடம் மாற்றப்படல் வேண்டும். ஆனால் இம்மாற்றத்தினைச் செய்ய முன்பு இந்நிதியினைக் கணக்குப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. விவசாயம்

(1) இப்பொழுது நடைமுறையிலுள்ள விவசாயக் கடன் திட்டம் அறவே திருப்தியற்றது. அதற்குப்பதிலாக இக்குறைகள் களையப்பட்டு ஒரு திட்டம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(2) நெல்லுற்பத்திக்குத் தகவுரை செய்யப்பட்டுள்ள விவசாயக் கடன் திட்டத்திற்கு, வேறு சிலவற்றுடன் பிணவருவன தேவைப்படுகின்றன:

(i) நெற்காணிகளின் பயிர்ச்செய்கைத் திட்டங்கள்.

(ii) விரிவுபடுத்தப்பட்ட பயிர் காப்புறுதித் திட்டம்.

(iii) நெற்காணி முறியில் திருத்தங்கள்.

(iv) ஒருங்குகப்பட்ட நிலப்பரப்புக்கள்

(v) சீராக்கப்பட்ட சந்தைப்படுத்தும் முறை

(3) நெல்லையும், அரிசியையும் சந்தைப்படுத்துவதில் இப்பொழுது கையாளப்படும் முறை ஊதாரித்தனமானது; பெருஞ் செலவுகளை உண்டுபண்ணுவது; படுமோசமான கெடுசெயலுக்கு இடமளிப்பது. ஆதலால், இதற்கு மாற்று முறையொன்று தகவுரை செய்யப்படுகின்றது.

(4) விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் பல நோக்கு சங்கங்களுக்கு வேண்டிய சேவைகளை வழங்கும் பொருட்டு நான்கு உச்ச கூட்டுறவு விவசாய சம்மேளனங்கள் நிறுவப்படல் வேண்டும்.

(5) காலத்திற்குக் காலம் பொது மதிப்பாய்வுகளை நடாத்தி அவற்றின் அடிப்படையிலே கிராமப்புறக் கடன்பாடு பற்றி செம்மையான புள்ளி விபரங்களை மக்கள் வங்கி சேகரித்தல் வேண்டும்.

## 14. கடற்றொழில்

(1) பதிவு செய்யப்பட்ட கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களை மதிப்பீடு செய்தல்வேண்டும். பயனுள்ள முறையில் இயங்காத சங்கங்களை, அவற்றினை உயிர்ப்பிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாதகால், பதிவழித்தல் வேண்டும்.

(2) விவசாயத் துறைக்கு தகவுரை செய்யப்பட்டது போன்று இத்துறையிலும் சிறு தொகையான ஆரம்பச்சங்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே இருத்தல் வேண்டும். ஆனால் இம்மாற்றத்தினை வலிந்து செய்யாது படிப்படியாகச் செய்தல் வேண்டும்.

(3) புதிய அமைப்பு உருவாகும்வரை இடையிலுள்ள சமாசங்கள் இப்பொழுது போல் தொடர்ந்து இயங்குதல் வேண்டும். தென்பகுதிக்குப் புதிய ஒரு சமாசம் நிறுவப்படல் வேண்டும்.

(4) உச்ச கடற்றொழில் சமாசத்திற்கு மீண்டும் விற்பனைச் சமாசப் புத்துயிரளிக்க வேண்டும். அஃது இலங்கை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமமேளனம் என்ற புதுப்பெயரில் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

(5) கடற்றொழிலாளர்களுக்கும், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்கும் இப்போதைய முறைக்குப் பதிலாக விவசாயத்திற்கும், சிறு கைத்தொழில்களுக்கும் தகவுரை செய்யப்பட்டுள்ள கடன் திட்டம் போன்ற ஒரு திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும்.

(6) கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி கருதி விசேட தொழில்நுட்ப அறிவு பெற்ற போதிய திணைக்கள அலுவலர் இருத்தல் வேண்டும்.

(7) கூட்டுறவுத் திணைக்களத்தோடும் மீன் பிடித் திணைக்களத்துடனும் கலந்தாலோசித்தபின்பு தேசீய கூட்டுறவு அபிவிருத்திச் சபை கடற்றொழில் துறையிலே கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு பற்றி பொதுவான திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும்.

## 15. சிறு கைத்தொழில்கள்

(1) கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொதுப் பொறுப்பு கூட்டுறவுத் திணைக்களத்தற்கு திருப்பி ஒப்படைக்கப்படல் வேண்டும். அவற்றிற்கு பதில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் ஒருவர் பொறுப்பாய் இருத்தல் வேண்டும். கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் நுட்ப அம்சங்களுக்கு மட்டுமே பொறுப்பாய் இருக்கும்.

(2) பொதுத் தகவுரையான பெரி ஆரம்பச் சங்கங்கள் கைத்தொழில் கூட்

டுறவுச் சங்கங்களுக்கும் ஏனையவகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தும்.

(3) பணியாளர் தொகையும், முதலீடும் ஒரு குறிப்பிட்ட அளவுவரையிலுள்ள, தொழிற்துறை உரிமையாளரை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுவாய்ப்பு நலக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுச் சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக உண்மையான கூட்டுறவுச் சங்கங்கள் என ஒப்புக் கொள்ளப்படல் வேண்டும்.

(4) நெசவாளர் சங்கங்களின் உச்ச சம்மேளனமொன்று இருத்தல் வேண்டும்.

(வளரும்)

---

# இசையினால் உனைப்பாட இனிக்குதய்யா

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

**க. சிவபாலன்**

எடுப்பு

இசையினால் உனைப்பாட இனிக்குதய்யா — தமிழ்
இசையினால் உனைப்பாட இனிக்குதய்யா
இணையில்லா பேரின்பம் ஜெனிக்குதய்யா—தமிழ் (இசை)

தொடுப்பு

திசையினால் புகழ் மணக்கும் திருப்பணி புரிந்தாய்
திண்மையாம் ஐக்கியம் திகழ்ந்திட வளர்த்தாய் (இசை)

முடிப்பு

வீரசிங்க மென்னும் வியன்பெயர் கொண்டாய்
வீறுபெறவே நின்று வேண்டிய கண்டாய்
தீரமுடன இங்குன் திருநாமம் போற்றினோம்
தேசமெலாம் புகழ் வாசம் மலர்ந்திட (இசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களை வாங்கி விற்பதல்ல கூட்டுறவு

கூட்டுறவு என்றால் பொருள்களை வாங்குவதும் விற்பதும் என்பது அர்த்தமல்ல. அது எல்லாத் துறைகளிலும் பரந்திருக்கும் ஒரு வாழ்க்கை முறை. இவ்வாறு காரியாதிகாரி திரு. S. அருணாசலம் பளை ப.நோ. கூ. ச. சமாசத்தின் வருடாந்த கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நல்ல முடிவுகளை எடுப்பதற்கும் கருத்தரங்கு ஏற்ற கருவி என மேலும் பேசுகையில் அவர் சுட்டிக் காட்டினார்.

வ. ஐ. மே. சபை நிருவாகக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது: எல்லா நாடுகளிலும் கூட்டுறவு இயக்கத்திற்கு பொருளாதாரத் திட்டத்திலே தனியிடம் கொடுக்கப்படுகின்றது. பழைய காலத்திலே ஐக்கிய நாணய சங்கங்களைப் பதிவு செய்ய முன்பு உறுப்பினர்களுக்கு உப விதிகள் பற்றி அறிவு புகட்டப்பட்டது. ஆனால், ப. நோ. கூ. சங்கங்கள் தொடங்கப்பட்டதும இந்த நல்வழக்கம் கைவிடப்பட்டது. சங்கங்களிலே அடிக்கடி ஏற்படும் தகராறுகளுக்கு அறியாமையே முக்கிய காரணமாகும். இந்நிலையைச் சீராக்குவதென்றால் உரிமைகள், கடமைகள் பற்றி உறுப்பினருக்கு அறிவு புகட்டவேண்டும். அப்பொழுதுதான் சங்கங்கள் சிறப்பாக இயங்க முடியும். இத்தேவைகளை ஒட்டித்தான் கருத்தரங்குகள் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. அடிக்கடி பொதுக் கூட்டங்களைக் கூட்டி உறுப்பினர்களுக்கு கூட்டுறவுக் கல்வியைப் புகட்ட வேண்டும். அப்பொழுதுதான் முன்னேற்றம் ஏற்படும்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. T. கந்தசாமி பேசுகையில் இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவப்பட்டு ஏறக்குறைய 60 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் போதியளவு வளர்ச்சியினை அடைய வில்லை என்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: இத்தேக்க நிலைக்கு முக்கிய காரணம் கூட்டுறவாளரிடை யே கூட்டுறவைப்பற்றி செம் மையான விளக்கம் இல்லா மையே. கூட்டுறவு இயக்கத் தின் முழுப்பயனையும் நாம் அடைய விரும்பின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கூட்டுற வுக்கோட்பாடு, செயல்முறை பற்றிய விளக்கம் இருத்தல் வேண்டும். அதன்படி அவர் கள் ஒழுகவேண்டும். அப் பொழுதுதான் கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள் களை அவர்கள் அடைய முடி யும். இத்தகைய அறிவைப் புகட்டுவதற்கு கருத்தரங்கு கள், சிறந்த சாதனமாகும்.

பனைப்பகுதியிலேயுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புதுப் புதுத் தொழில்களை ஆரம்பிக்கும் சாத்தியக் கூறு களை ஆராய வேண்டும் என வ. ஐ. மே. சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: பனைத் தும்பு போன்றவற் றிற்கு வெளிநாட்டுச் சந்தை களிலே நல்ல கிராக்கி உண்டு. ஆதலால் எமது இயற்கை வளங்களை நாம் செம்மையாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய் வதன் மூலம் எமது வரு மானத்தைப் பெருக்குவது டன் வேலை வாய்ப்புக்களை யும் அதிகரித்துக் கொள்ள லாம். கூட்டுறவுச் சங்கங் கள் தங்களுடையது என் பதை எக்காலத்திலும் உறுப் பினர்கள் மறுத்தலாகாது. அவர்கள் தமது பணத்தைச் சேமித்து கூட்டுறவு வங்கி யிலே இட்டு அதைப் பலப் படுத்த வேண்டும்.

## குறிஞ்சி மலர்

இப்பொழுது பிறந்துள்ள 1970-ம் ஆண்டை குறிஞ்சி மலர் ஆண்டு என்று சொல்வது பொருத்தமாக இருக்கின்றது. ஏனெ னில் 12 வருடங்களுக்கொருமுறை பூக்கும் குறிஞ்சிச் செடிகள் இவ்வருடத்தில்தான் பூக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச் செடிகள் இந்தியாவில் கோடைக்கானல், நீலகிரி, முதலிய மலை சார்ந்த இடங்களில் ஏராளமாகக் காணப்படுகிறது. இச்செடி கள் பூத்துக்குலுங்கும் அழகைப் பார்ப்பதற்கு இப்போதே கலா ரசிகர்களும், பாடசாலை ஆசிரியர்களும் போக்கு வரத்து வசதி களைச் செய்து வருகின்றனர். நீல நிறமுடைய குறிஞ்சிப் பூக்கள் நீக்கமற மலைகளில் பூத்திருக்கும் காட்சி உள்ளத்தைக் கவர வல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவது இன்றியமையாதது

உங்களது உறுப்பினர்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு ஓர் ஆராய்ச்சி நிலையத்தினை நிறுவுவது இன்றியமையாதது. ஆதலால் இந்நிலையத்தை நிறுவுவதற்கு வேண்டிய பணத்தினை ஒதுக்குமாறு உங்களை வேண்டுகிறேன். மேலும், வாழைப்பயிரிடுவதில் புதிய முறைகளைக் கையாள்வது நன்மைபயக்கும்.

மேற்கண்டவாறு வ. ஜ. மே. சபை உபதலைவர் திரு. R. C. S. குக் வலி-கிழக்கு கூட்டுறவு வாழைக்குலை விற்பனவுச் சங்கத்தின் பத்தொன்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பழைய செய்கை முறைகளைக் கைவிட்டு நவீன இயந்திரப் பாங்கான உத்திகளைக் கையாளுமாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு P. மாணிக்கவாசகர் ஆலோசனை கூறினர்.

தலைமை காரியாலயப் பரிசோதகர் (அபிவிருத்தி) திரு. T. முருகேசு பேசுகையில் கூறியதாவது: நோய்களைத் தடுப்பதற்கும், புதிய செய்கை முறைகளைக் கையாள்வதற்கும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வாழையைப் பயிரிடும் விவசாயிகளின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும். பழைய முறைகளைக் கைவிட்டு முன்னேற்றமான புதிய முறைகளைக் கையாண்டால் உற்பத்தி மேலும் பெருகும். உறுப்பினர்களுக்கு புதிய தொழில் நுட்ப அறிவைப் புகட்டுவது அவசியம். அத்துடன் சங்க அலுவல்களை நடாத்துவதற்கு வேண்டிய அறிவும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்.

பின்வருவோர் நிருவாக சபையின் வெற்றிடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள் M. வேலாயுதர், S ஆறுமுகம், S. முத்துவேலு, K. தர்மலிங்கம், V. திருநாவுக்கரசு.

1-9-68 தொடக்கம் 31-9-69 வரை ரூபா 5878-44 சதத்தை சங்கம் சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள நிறைவாய் வாழ்வதே கூட்டுறவு

நல்லைக்குமரன்

ஒருவர் என்றாற் தனிவாழ்வு — அது
ஒட்டுறவில்லா ஒருவாழ்வு
இருவர் எனிலோ இல்வாழ்வு — இது
இன்பம் நல்கும் பெருவாழ்வு

தாயார் தந்தை பிள்ளைகளே — நல்ல
தங்கக் குடும்பம் தரணியிலே
ஓயாதிவர்கள் ஒன்றுபட்டே — நல்
உழைப்பொடு வாழ்வர் கூட்டுறவாய்.

நாளும் குடும்பம் பலசேர்ந்து — உள
நிறைவாய் வாழ்வதே கூட்டுறவு
மூளும் இன்ப அன்பினிலே — செயும்
முயற்சியில் நாடு சிறப்புறுமே

கூட்டுறவென்பது நாட்டுயர்வு — அது
தவலய மெங்கும் சிறந்திடவே
நாட்டுவோம் நீதி நெறிமுறைகள் தீய
நெறிதனை வேரொடு சாய்த்திடுவோம்.

தியாகம் உண்மை அன்புடனே — சிறு
தீமையும் அன்றி ஒற்றுமையாய்
நியாயம் கண்டே நீதியுடன் — நாம்
நலம்பல செய்வோம் கூட்டுறவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Serv...
121, POINT P... ROAD
NALLUR, JAFFNA
No.

# தொடர்ந்து தனித்து இயங்குவதா அன்றி மக்கள் வங்கியுடன் இணைவதா?

## கூட்டுறவு வங்கிகளை எதிர்நோக்கும் பிரச்சினை!

கூட்டுறவு வங்கிகள் இன்றுபோல் தொடர்ந்து தனித்து இயங்குவதா அல்லது மக்கள் வங்கியுடன் இணைவதா என்பதே இன்று நமது நாட்டிள்ள கூட்டுறவு வங்கிகளை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை என யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கித் தலைவர் திரு இ. இராசரத்தினம் மேற்படி வங்கியின் நாற்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கையிலே முதன் முதலாக நிறுவப்பட்ட கூட்டுறவு வங்கி என்ற பெருமை வாய்ந்தது இவ்வங்கி. எனவே இவ்வங்கியை உருவாக்க உழைத்த பெரியார்களின் இலட்சியங்களுக்கு ஏற்ப நாம் இவ்வங்கியை நடாத்துவதே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும் என்று மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

திரு. இராசரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூட்டுறவு வங்கிகள் தனித்து இயங்குவதன் அவசியம் பற்றி எமது வங்கி கூட்டுறவு விசாரணைக்குழு முன் சாட்சியமளித்தது. விசாரணைக்குழு தனது அறிக்கையில் திறம்பட இயங்கும் கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியுடன் கட்டாயமாக இணைய வேண்டுமென்று தகவுரை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

நாம் எமது எதிர்காலம் பற்றி கவனமாக ஆலோசிக்க வேண்டும் என்றும், வருங்காலச் சந்ததியின் நலனை மனதிற் கொள்ள வேண்டும் என்றும், அவர் மேலும் கூறினார். யாழ்ப்பாணக் கூட்டுறவு வங்கியின் எதிர்காலம் பற்றி குறிப்பிடும் போது அவர் கூறியதாவது: யாழ்ப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணக் கூட்டுறவு மாகாண வங்கி தொடர்ந்து தனித்து இயங்குவதா அல்லது மக்கள் வங்கியுடன் இணைவதா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். எமது வங்கி தனது சொந்தப் பலத்திலே இயங்குவதற்கு நீங்கள் ஒத்தாசை புரியவேண்டும். வங்கியின் சேமப்பணத்தைப் பெருக்குதற்கு நாம் முனைய வேண்டும். ஒவ்வொரு கூட்டுறவாளனும் இதில் அக்கறை செலுத்தவேண்டும். எங்களுக்கு ஒரு வங்கி தேவை என்றால் நாம் அதன் நிதிகளைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளுதல் எமது தலையாய பணியாகும். புதிய விவசாயக் கடன் திட்டத்தின்படி எடுத்த கடன்களைத் தவணை தப்பாது திருப்பிக் கொடுப்பது இன்றியமையாதது.

பின்வருவோர் அதிகார சபையின் வெற்றிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்: திருவாளர்கள் மு. கணபதிப்பிள்ளை, சு. அம்பலவாணர், தி. க. இராஜசேகரன், T. பரமானந்தராசா, வி. இராஜதுரை, R.R. தர்மரத்தினம், த. அம்பலம். S. U. வல்லிபுரம்.

## விளைபொருள்களைச் சங்கத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்

இணுவில் ப. நோ. கூ. சங்கத்தின் 16 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. வி. நல்லதம்பி அங்கத்தவர்கள் தமது விளைபொருள்களைச் சங்கத்திடம் ஒப்படைத்து முழு ஆதரவையும் அளித்தல் இன்றியமையாதது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: உறுப்பினர்கள் தவணை தப்பாது கடன்களைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். எமது சங்கத்திலே சேமிப்புகளை இட்டு சேமநிதியினைப் பெருக்குதல் அவசியம். அங்கத்தவர் அல்லாதவர்களும் தமது சேமப் பணத்தை எமது கிராம வங்கியிலே இட்டால் அதிக நன்மை யளிக்கும். உறுப்பினர்கள் யாவரும் சங்க அலுவல்களிலே அக்கறை எடுத்தால் தான் நாம் முன்னேற முடியும்.

தலைமைக் காரியாலயப் பரிசோதகர் (அபிவிருத்தி) திரு. T. முருகேசு பேசுகையில் கூறியதாவது: அடிக்கடி பொதுக் கூட்டங்களைக் கூட்டுவது அதிக நன்மை பயக்கும். உங்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்திற்கு வேண்டிய அத்தனை உதவிகளை யும் திணைக்களம் செய்யத் தயாராக இருக்கின்றது. ஆதலால் உங்களுடைய முன்னேற்றம் கருதி ஒற்றுமையாய் உழையுங்கள். விவாதங்களும் கலந்துரையாடல்களும் இன்றியமையாதன. ஆனால், அதேசமயம் சங்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருத்தலாகாது.

வ. ஐ. மே. சபை நிருவாகக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில், சங்கத்தின் நலன் கருதி வேற்றுமைகள் அத்தனையையும் மறந்து ஒற்றுமையாக உழைக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினர். பயிற்சி வகுப்புகளின் அவசியத்தினை வலியுறுத்திய அவர், சங்கம் கிராமத்தின் பொருளாதார நிலையினை உயர்த்த மேலும் உழைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இச்சங்கம் கடந்த ஆண்டு ரூ. 29,282/75 ஐ சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது. 1-2-69 ல் இதன் சேம மீதி ரூ. 86271/37. சென்ற வருடம் விவசாயக் கடனை ரூ. 135,358/60 ஐ வழங்கியுள்ளது. கிராமவங்கிப் பகுதியில் ரூ. 87,000/- பெறுமதியான 38 மத்திய காலக்கடன்களும் ரூ. 155,833/- பெறுமதியான 844 அடைவு கடன்களும், வழங்கப்பட்டுள்ளன. கடனறவுகளும் திருப்திகரமாக நடைபெற்றுள்ளன. இவ்விபரங்களை மேற்படி சங்கத்தின் வருடாந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

# தரமான சங்கு; நிரந்தரமான வியாபாரம்

தரமான சங்குகளை அனுப்பிவைப்பதன் மூலம் எமமுடன் மேற்கொண்டுள்ள சங்கு வியாபாரத்தை நிரந்தரமானதாக்குங்கள் இவ்வாறு பாக்கிஸ்தான் வர்த்தக காரியதரிசி திரு. ஹக் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் சமுகமாயிருந்த கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். இக்கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் அணிமையில் நடைபெற்றது.

பாக்கிஸ்தானிலிருந்து இங்கு வந்து தனிப்பட்ட வியாபாரிகளிடம் சங்கு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டு போகப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் பின்பு இங்கிருந்து தரம் குறைந்த சங்குகளே அங்கு அனுப்பப்பட்டு வந்தன. எனவே, சங்கு ஏற்றுமதியில் நாம் சிரமப்பட்டிருக்கிறோம். தரமான சங்குகளை வாங்கவே இப்போது நாம் முயற்சிக்கிறோம என மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் பாக்கிஸ்தானுக்கு தேவையான சங்கு முழுவதையும் சமாசத்திடமிருந்து பெற இருந்தோம். ஆனல் அவ்வளவு தொகைச் சங்கையும் வாங்க இயலாது போய்விட்டது என்று கூறிய அவர், வடமாகாண கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நல்ல சங்கை அனுப்புவதில் பெயர் பெற்றதாக விளங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இலங்கையிலிருந்து எவ்வளவு உற்பத்திப் பொருள்களையும் ஏற்றுமதி செய்து இலங்கைக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையே வர்த்தக உறவை ஏற்படுத்த விரும்புகிறோம். ஆனல் இலங்கை உற்பத்தித் துறையில் அபிவிருத்தி குன்றிய நாடாக விளங்குகின்றது என்றார்.

திரு. ஸ்ரனிஸ்லாஸ் பேசுகையில் சமாசத்திற்கு சங்கு ஏற்றுமதி உரிமை வழங்கப்பட்டபோதிலும் தனிப்பட்ட வியாபாரிகள் அதற்கு இடையூறுகள் விளைவித்து வந்தனர் என்றும், இவ்விடையூறுகள் பாக்கிஸ்தான் தூதுவருடன் தமக்கு ஏற்பட்ட தொடர்பால் களையப்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட்டதுடன் தரமான சங்குகளைச் சமாசம் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது என்றும் தெரிவித்தார்

## பயன்படத்தக்க கட்டிடம்

எதிர்காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளப் போகின்ற விவசாயக் கடன் திட்டங்களிலும், உணவுப் பங்கீட்டுத் திட்டங்களிலும், கூட்டுறவு இயக்கம் மிகவும் பிரதான இடத்தை வகிக்க இருப்பதால் இக்கட்டிடம் உங்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடும் என விவசாய உணவு அமைச்சர் திரு. M. D. பண்டாமன்னர் மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் பேசுகையில், இக்கட்டிடத்திற்குச் செலவழித்த ஒரு பகுதிப் பணம் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து திரட்டப்பட்டது. மிகுதிப்பணம் கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்து கூட்டுறவு ஆக்க ஆணையாளர்கடன் கொடுத்த நிதியாகும். எப்படியாயினும் கூட்டுறவு இயக்கத்திற்குச் சொந்தமான பணத்திலேதான் இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இது கூட்டுறவு இயக்கத்தின் திறமைக்கும், தூய்மைக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது என்றார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த ஜனாப் O. K. செயிலாப்தீன் மன்னார் மாவட்டக் கூட்டுறவாளர் மிக நீண்டநாட்களாகக் கண்டு வந்த கனவை நனவாக்க உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு K. S. பொன்னுத்துரை பேசுகையில் மன்னார் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு இக்கட்டிடம் அடித்தளமாய் அமையுமென்று குறிப்பிட்டார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் பேசுகையில் எந்த நாட்டிலாவது மாபெரும் சாதனை ஒன்றைச் சாதிக்க வேண்டுமாயின் கூட்டுறவு இயக்கத்தின் மூலமே இலகுவில் நிறைவேற்றலாம் என்பதற்கு இக்கட்டிடம் சான்றாக அமைகின்றது என்று குறிப்பிட்டார். மன்னார் மாவட்ட கூட்டுறவாளரின் தன்னலமற்ற சேவைக்கும், தியாகசிந்தைக்கும் இக்கட்டிடம் என்றென்றும் எடுத்துக்காட்டாகத் திகழும் என மேலும் அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மன்னார் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. V. A. அழகக்கோன், பதில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. R. B. இராஜகுரு, மன்னார் பட்டினசபைத் தலைவர் ஜனாப் M. S. A. ரஹீம், விற்பனை அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் திரு. K. B. திசநாயக்கா ஆகியோரும் பேசினர். மேற்படி சமாச நிருவாகக்காரியதரிசி திரு. த. லங்காநேசன் நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு வங்கி சுதந்திரமாக இயங்க உதவுங்கள்

கூட்டுறவு மாகாணவங்கி சங்கங்களுக்குக் கடன்களைக் கொடுப்பதற்குப் பிறர் கையை நம்பியிராது சுதந்திரமாகத் தொடர்ந்து இயங்குவதற்கு இப்பகுதி மக்கள் இயலுமானவரையும் தமது பணத்தை இவ்வங்கியில் சேமிக்க வேண்டும். இவ்வங்கியில் சேமிக்கும் பணம் உங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இப்பகுதிகளில் பொருள் உற்பத்திக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளைப் பூர்த்தி செய்ய உதவுகின்றது. ஆனபடியால் விவசாயச் சங்கங்களும் ஏனைய சங்கங்களும் அங்கத்தவர்களைச் சேமிக்கும்படி ஊக்குவித்தும், சேமிப்புப் பணங்களை உடனுக்குடன் இவ்வங்கியில் போட்டும், சமுதாய முன்னேற்றத்திற்கு உதவிசெய்து வடபகுதியின் பொருளாதாரம் சீரடைய வழிகோலுமாறு மேற்படி வங்கியின் நாற்பதாவது வருடாந்த அறிக்கை கூறுகின்றது.

இவ்வங்கி கடந்த வருடம் ரூ 60,007/09 ஐ சுத்தலாபமாகப் பெற்றுள்ளது. விவசாயக் கடனை ரூ. 7,645,513/01 ஐயும், கடனை ரூ. 7,319,931/- ஐயும் வழங்கியுள்ளது. இவ்வங்கியின் அடக்கப்பணமும் வேறு நிதிகளும் அரசாங்கத்திலும் தபாற் கந்தோரிலும் மக்கள் வங்கி முதலிய வேறு தாபனங்களிலும் ரூ. 3,232,602/- முதலீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வருட முடிவில் சேமவைப்புத் தொகை ரூ.3 531.665/56 என மேலும் அவ்வறிக்கை கூறுகின்றது.

# சிக்கனம், சட்டங்கள் விளக்கப்பட்டன

சிக்கன முறையையும், சங்கத்தின் சட்டங்களையும் விளக்கும் முகமாக தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம் அணிமையில் பண்ணுகம் ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் ஒரு கூட்டத்தை நடாத்தியது. இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் தனுதிகாரி, உபகாரியதரிசி, பிரதம லிகிதர் ஆகியோர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவே சிறந்த ஆயுதம்

விஸ்வமடு போன்ற வாலிபர் குடியேற்றத் திட்டங்களிலே கூட்டுறவு மூலமே பிரச்சினைகளைத் தீர்க்கலாம். ஏனெனில் பிரச்சினைகளை எதிர்ப்பதற்கு அதுவே சக்தி மிக்க ஆயுதம். இவ்வாறு வ. ஐ. மே. சபை கௌரவ காரியதரிசி திரு சுகந்தையா விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்ட ப. நோ. கூ. சங்க கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் உரையாற்றுகையில் கூட்டுறவு ஒரு வாழ்க்கைத் தத்துவமாதலால் அதன் கொள்கைகளை உங்கள் அன்றாட வாழ்க்கையில்கைக்கொள்ள வேண்டும். அல்லது ஒருவித பிரயோசனமுமில்லை என்றார்.

இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசிய காரியாலயப் பரிசோதகர் திரு. V. S. இராமநாதன் கருத்தரங்கின் நோக்கங்களை விளக்கினார்.

# அமரர் வீரசிங்கத்தின் வாழ்வு முறையைப் பின்பற்றுவோம்

அமரர் வீரசிங்கம் வட பகுதியில் கூட்டுறவு இயக்கம் செழித்து வளர அரிய தொண்டு புரிந்தார். கூட்டுறவாளராக விளங்கிய அன்னாரின் வாழ்வு முறைகளைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் நன்றியாகும். இவ்வாறு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. கனகசபை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வீரசிங்கம் நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு வ. ஐ. மே. சபை உபதலைவர் திரு. R. C. S. குக் தலைமை வகித்தார்.

கலையரசு க. சொர்ணலிங்கம் பேசுகையில் அமரர் வீரசிங்கம் கூட்டுறவுத் துறைக்கு மாத்திரமல்ல, கல்வித்துறைக்கும் அரிய சேவை புரிந்துள்ளார் என்று குறிப்பிட்டார். அமரர் வீரசிங்கம் சிறந்த தலைமையாசிரியராக இருந்து நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்கினார் என மேலும் பேசுகையில் அவர் கூறினார். திருவாளர்கள்: பி. வி. மிக்கேற்பிள்ளை, த. மயில்வாகனம் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம்

—காரை செ. சுந்தரம்பிள்ளை

## வேறு

அந்த நகரத் தெருவெலாம் — நின்று
ஆரவாரஞ் செய்த மக்களை — அவள்
வந்தனை செய்து வணங்கியே — விடை
வாங்கிய பின்னர் சிவிகையில் — மிகத்
தந்திர மாகவே செல்கையில் — பெருஞ்
சாலையொன் றாரம்ப மானது — அதில்
சுந்தரி தண்டிகை விட்டுமே — முனி
தொடரவோர் சோலை அடைந்தனள்

பெண்ணெழிலே மடவன்னமே — எனைப்
பித்தனாய் ஆக்கிய வெல்லமே — பலர்
கண்ணைக் கவருமிச் சோலையில் — உனைக்
கட்டித் தழுவ விழைகிறேன் — மலர்
வண்ணமே இப்படி வாவென — அவர்
வாஞ்சையுடன் கரம் பற்றவே — அந்தப்
பண்ணிசையாள் கைவிலக்கியே — மிகப்
பக்குவமாய் இவை கூறுவாள்

## வேறு

அன்பிற் குரிய முனிவரே — மிக
ஆற்றல் படைத்த பெரியவரே — எனை
இன்று புகழ்க்கிட மாக்கி வைத்தே — ஒரு
ஏந்திழை போற்றிட வைத்தவரே
எந்தன் மனதில் இருப்பவரே — காதல்
இன்பம் நிலையல்ல ஆகையினால் — இனிச்
சென்று தவம்புரி வீர் இனிதே — இந்தச்
சேயிழை யாளை மறந்திடுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்ச மகள் இந்த வாறுரைத்தே — பதில்
வார்த்தைக்கும் நில்லாது செல்கையிலே — அவர்
அஞ்சுங் கலங்கி அறிவிழந்தே — மிகக்
கெஞ்சி யிரக்கத் தொடங்கி விட்டார்
அஞ்சுகமே என்ன வார்த்தை சொன்ஞய் — எந்தன்
ஆவியை விட்டுப் பிரிந்திடினும் — உனை
மஞ்சத் தணைத்து மகிழுகிற — பெரும்
வாய்ப்பை யிழக்கத் துணிகுவனே

நெஞ்சைப் பிளந்தெனைப் பார்த்திடடி — அங்கே
நீயிருப்பாய் அதைஏன் மறந்தாய் — கூடிக்
கொஞ்சிக் குலாவிய மாதரசே — என்ன
குற்றம் இழைத்தனன் கூறிடடி
வஞ்சகம் செய்யத் துணிந்தனனே — உன்றன்
வார்த்தையை மீறி நடந்தனனே — கொடும்
நஞ்சினை வார்த்தையில் ஏன்கலந்தாய் — என்னை
நன்றி கொன்றேனென எண்ணினையோ

தஞ்ச மடைந்திட வந்தவளே — காதல்
தந்து மகிழ்ந்திட வைத்தவளே — பெரும்
பஞ்சில் நெருப்பினை மூட்டி வைத்தே — இந்தப்
பாவியைக் கைவிட்டுச் செல்வதுமேன்
மஞ்சரியே நல்ல மாணிக்கமே — உளம்
மாறடி என்றன் அருமருந்தே — என்று
கெஞ்சி இரந்தனர் கால்விழுந்தார் — அவள்
கிஞ்சித்தும் இலட்சியம் செய்யவில்லை

ஆடவன் என்ற நினைப்பிழந்தே — பெரும்
ஆசையுள் மூழ்கி மருச்சி முனி — அந்தத்
தாடகை யொத்தவள் கால்களிலே — கண்ணீர்
தாரை தாரை யாக வார்த்திடுவார்
நாடி வந்தாவலை ஊட்டியவள் — காம
நஞ்சைச் கலந்து பருகியவள் — முன்பு
கூடி மகிழ்ந்த முனிவருக்குப் — பதில்
கூறுவள் புன்னகை பூத்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளையறுந்தது

அரசசபை தனிலொருநாள் இருந்த போது
அகந்தைகுடி கொண்டவளாய் ஒருத்தி என்னை
வரிசைதப்பி யேசிவிட்டாள் வருந்தி யானும்
வாய்கொடுத்தேன்; வஞ்சியவள் நகைத்தவண்ணம்
பெரியவளென் றெண்ணுதே பெரிதா யேதோ
போய்முனிவர் மருச்சியையே வென்று வந்து
அருகினிலே வைத்திருப்பாள் போல வென்றே
அவமானப் படுத்திவிட்டாள் ஆத்தி ரத்தால்

அடிசிறுக்கி யதிகமாய்ப் பேச வேண்டாம்
அந்தமுனி வரையடையா விட்டால் நானும்
முடிவணங்கி உனக்கடிமை யாகி நிற்பேன்
முக்கண்ணன் மீதாணை என்றேன்; அன்னுள்
கடிதினிலே காமவிழா முடியு முன்புன்
கைவரிசை யைக்காட்டி விட்டா யானுல்
நொடியிலே நானடிமை யாகி நின்று
நும்பணியைச் செய்திடுவேன் என்றுள் சென்றுள்

திட்டமிட்டுச் செயல்புரியத் தொடங்க லானேன்
செய்தபடி யேவெற்றி கிட்ட லாச்சு
இட்டமுடன் எனக்குதவி செய்தீர் வென்றேன்
எனக்கடிமை யாகிவிட்டாள் இதுவே போதும்
விட்டகுறை தொட்டகுறை என்று சொல்வார்
விரைந்துதவ வேள்விதனை இனிது செய்வீர்
நாட்டமொன்று மில்லையென்றுள் நகைத்தாள்
[சென்றுள்
நடைப்பிணம்போல் மருச்சிதவச் சாலை மீண்டார்

புல்லர்களே பொன்கொடுத்து வீழு கின்ற
புலைநரகு தனையடைந்து புத்தி கெட்டுச்
சொல்லரிய துன்பமெலாம் துய்த்து மீண்டும்
தொடர்ந்துதவ மாற்றுதற்கு வந்தா ரப்பா!
வெல்லரிய மாந்தரையும் வெல்லும் வல்ல
வேசியவள் தொடர்பன்று கிடைத்த தாலே
நல்லதொரு பாடமவர் கற்ருர் நங்கை
நடிப்பவற்குப் புகட்டியதே பெரிய ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகொழுகு கங்கைநதி யோர முள்ள
அழித்தெழுதா ஓவியம்போல் அழகை வீசும்
செழிப்பமைந்த நகரான சம்பா தன்னில்
சீரழிந்த முனிவரது கதையைக் கேட்டுப்
பழிப்பமைந்த பரத்தையிட மிருந்து மீண்டும்
பயனமைந்த தவமியற்றும் முனிவ ரெங்கே
விழிப்புடனே வினையாற்று கின்றார் காண
விழைகின்றேன் என்னஅவர் விளம்பு கின்றார்

அடுத்திருந்து கெடுத்தவளால் அறிவி ழந்து
அவமானச் சின்னமாய் இருக்கு மந்த
நடைப்பிணத்தை நீபார்ப்பாய் நான்தா னப்பா
நாடிவந்த மருச்சியல்ல; நலமி ழந்தோன்
சுடச்சுடரும் பொன்போலத் துன்பம் வந்து
சுடச்சுடவே தூயநெறி தோன்று மென்பர்
நடுத்தெருவி லெனைவிட்டுச் சென்ற அந்த
நங்கையினால் நன்நெறியைக் கண்டேன் என்றே;

கண்கள்குள மாகஒரு குழந்தை போலக்
கற்பிழந்த மருச்சியவர் தேம்பித் தேம்பி
பெண்ணணை யால்என்தன் பெருமை கொன்றேன்
பேறான தவம்விட்டுப் பேத லித்தேன்
புண்ணியமெல் லாமிழந்தேன் புனித மற்றேன்
பூர்வீக வினையாலோ மடமை யாலோ
மண்மீதிற் சிரிப்பிற்கா ளாகி நின்று
மயங்குகிறேன் என்றழுது விம்ம லுற்றார்

சிலையாக இருந்தஅப கார வர்மன்
தேம்பியழும் முனிவரைத் தேற்றி, ஐயா
மலைபோன்ற நெஞ்சுறுதி கொண்டா ரேனும்
மாபெரிய வூழ்வலியை வெல்வ துண்டோ
விலைமாதால் உங்கள்தவம் அழிவ தற்கோர்
விதியுண்டு போலும் அதை விலக்க லாமோ
தலையாலே நடந்தாலும் தலையெ ழுத்தைத்
தாரணியில் யார்தடுத்து நிறுத்த வல்லார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுரைத்து விடைபெற்றுச் செல்வ தற்கு
எடுத்தடியை வைக்கின்ற போது அங்கே
அன்பாநீ இங்கேயா இருக்கின் ருய்யான்
அலேயாத இடமில்லே எனவி யந்து
முன்புபிரிந் தேகியஅந் நண்பன் நின்ருன்
மூண்டநட்பால் இருபேரும் தழுவிக் கொண்டார்
நன்றிசொன்ஞர் முனிவருக்கு; ஆனல் அந்த
ஞானியோ கடவுள்உமைச் சேர்த்தார் என்ருர்

## வேறு

அமைதி யாய்விடைபெற்றிரு பேர்களும்
ஆங்கி ருந்து புறப்பட்டுச் செல்கிருர்
சுமை யிறங்கிய தாலந்த மாமுனி
தூய ஆச்சிர மத்துள் நுழைகிருர்
எமை வருத்திடும் காம குரோதங்கள்
இரவி முன்பனி யாவதைக் காண்கிறேம்
நமை யெலாம் ஒரு சக்தி உலகிலே
நன்கு காப்பதை உள்ளத் துணர்கிறேம்!

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

(முற்றும்)

## சரியான வழி

செல்வந்தர்களையும், முதலாளிகளையும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது சரியல்ல. அவர்களுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள உறவு முறையைத் தூய்மைப்படுத்தி வலுப்படுத்துவதுதான் சரியான வழியாகும்.

—காந்திஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பணத்தை
# உங்கள் கூட்டுறவு மாகாண வங்கியில்
# சேமியுங்கள்

**நிலைச் சேமவைப்பு :**

*12 மாதங்களுக்குரிய நிலையான வைப்பிற்கு* 4%

5 வருடங்களுக்கும் அதற்குமேலும் உள்ள நிலையான வைப்பிற்கு ... 5%

*10 வருடங்களுக்கும் அதற்குமேலும் உள்ள நிலையான வைப்பிற்கு* 5½%

**சேமவைப்பு :** *3¾% வட்டி கொடுக்கப்படும்.*

*இவ்வைப்பிலிருந்து நாளாந்தம் பற்றுவரவு செய்வதற்கு வசதியுண்டு. கூட்டுறவுச் சங்கங்களின் சேமிப்பிற்கு 4½% வட்டி கொடுக்கப்படும். ஸ்தாபனங்களின் சேமிப்பிற்கு, மிகக்குறைந்த மிச்ச இருப்பு ரூ. 5000/- மாக இருக்கும் மாதங்களுக்கு 4% வட்டி கொடுக்கப்படும்.*

**பத்து வருட சேமிப்புப்பத்திரங்கள் :**

*6% வட்டி கொடுக்கப்படும்.*

**மாதாந்த தொடர் சேமிப்பு :** *வட்டி 6%*

*இச்சேமிப்புத்திட்டத்தின்கீழ் 60 மாதங்களுக்கும், 81 மாதங்களுக்கும், 120 மாதங்களுக்கும் சேமிப்பு ஏற்றுக்கொள்ளப்படும். ஆகக்குறைந்த தொகை ரூ. 1/-. ரூ. 1/- மாதம் மாதம் சேமிப்பவர். 60 மாதங்களின் பின் ரூ. 70/- பெறுவார். 81 மாதங்களின் பின் ரூ. 100-/ பெறுவார். 120 மாதங்களின் பின் ரூ. 163/- பெறுவார்.*

**நகை அடைவுபிடித்தல் :**

*நகை அடைவுபிடித்தல் வங்கியின் எல்லாக்கிளைகளிலும் நடைபெறுகின்றது. 10½% வட்டி. பகுதிபகுதியாகவும் பணத்தைச் செலுத்தலாம்.*

## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

**கிளைகள் :**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | பரந்தன் |
| சங்கானை | சுன்னாகம் | ஊர்காவற்றுறை |

பருத்தித்துறை (நெல்லியடி) வலி-கிழக்கு (ஆவரங்கால்)

தலைமைக் காரியாலயம்:

**59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் "பென்சன்"!

'வசதிக்கேற்ப பணம் கட்டும்
தேசிய உபகாரச் சம்பளக் காப்புறுதிப் பத்திரம்
ஒன்று வாங்குங்கள்.

நீங்கள் என்ன ஊழியம் செய்பவராக இருப்பினும் எவ்வளவு ஊதியம் பெறுபவராக இருப்பினும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உதவிபுரியும் திட்டமிது. காப்புறுதித் தவணைக் கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட வேண்டுமென்ற கட்டாயமில்லை; வசதிப்படி, வசதியான நேரத்தில் கட்டலாம். இவ்வாறு சிறு சிறு தொகைகளைக் கட்டி வயோதிபக்காலத்தில் கவலையின்றி வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுங்கள். வேண்டுவதெல்லாம், ஒரு பிரேரணைப் பத்திரம், பிறப்புச் சான்றுப்பத்திரம் என்பன மட்டுமே. வைத்தியப் பரிசோதனை கூடத் தேவையில்லை.

விவரங்களுக்கு :

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
288, யூனியன் பிளேஸ்,
**கொழும்பு 2**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org